‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.

# 20 திராவிட மாடல் அரசு

எழுத்தாளர் கி.ராஜநாராயணன் நினைவரங்கம் திறப்பு விழாவில்...



முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு விழாவில்...



# செய்நன்றி மறக்காத பண்பாடு!

“உருவ வழிபாடு வேறு, பண்பு வழிபாடு வேறு. பலர் எங்களை ‘உங்களுக்குத்தான் உருவ வழிபாடு கிடையாதே. படத்திறப்பு, சிலைத் திறப்புகளை மட்டும் பின்பற்றலாமா? என்று கேட்கலாம். ஒருவரின் குணத்தையும் பண்பையும் மக்கள் அறிந்து, அதன்படி நடக்கவேண்டும் என்பதற்காக, இவை நடத்தப்படுவதாகும்” என்று 1956 – ஆம் ஆண்டு மார்ச் 17-ஆம் தேதி, திருச்சி பெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிச் சொற்பொழிவில் கூறினார், தந்தை பெரியார்.

முன்பெல்லாம் யாரேனும் காலமாகிவிட்டால், சில ஆண்டுகளுக்கு அவர்களை நினைவுகூரும் வகையில் சடங்குகள் செய்வார்கள். பிறகு, அவர்கள் மறக்கடிக்கப்பட்டுவிடுவார்கள். ஆனால், திராவிட இயக்கம் தோன்றிய பிறகுதான் அந்த வழக்கங்களை ஒழித்து, படத்திறப்புகள், சிலைகள் திறப்பது, நினைவகம் அமைப்பது, திட்டங்கள், இடங்கள், சாலைகள் போன்றவற்றுக்கு மறைந்தவர்களின் பெயர்களைச் சூட்டுவது போன்றவை வழக்கமாகின. அவற்றின் மூலம் மறைந்த தலைவர்கள் காலாகாலத்துக்கும் மக்கள் மனதில் நிலைத்து நிற்பார்கள்.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது இப்படி ஒரு பண்பாடு இருக்குமா என்பது சந்தேகம்தான். இவ்வாறு படங்கள், சிலைகள் திறப்பது, திட்டங்களுக்குப் பெயர் சூட்டுவது போன்ற விஷயங்களை பேரறிஞர் அண்ணா அவர்கள், **‘செய்நன்றி கொல்லாத தமிழர் பண்பாட்டை நிலைநாட்டும்’** முயற்சியாகக் கருதினார். பெரியாரிடமிருந்தும் அண்ணாவிடமிருந்தும் கற்ற பாடங்களை, தான் முதலமைச்சராக வந்த பிறகு, தமிழ்ச் சமுதாயத்தில் நிகழ்த்திக் காட்டினார் முத்தமிழறிஞர் கலைஞர்.

“இன்றைய இளைஞர்கள் கேளிக்கைகள், விழாக்கள் இவற்றில் தங்களது மனதைப் பறிகொடுப்பவர்களாகத்தான் பெரும்பாலோர் இருக்கிறார்கள். அதற்காக ஒரு நாட்டில், சமுதாயத்தில் கேளிக்கைகளே கூடாது, விழாக்களே கூடாது, மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளே இருக்கக்கூடாது என்று வாதிடுபவன் அல்ல நான்.

மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள் இருக்கலாம். கேளிக்கைகள் இருக்கலாம். விழாக்கள் இருக்கலாம். ஆனால், நாட்டைக் காப்பாற்ற வேண்டும், மொழியைக் காப்பாற்ற வேண்டும், சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற நிலை வரும்போது, அந்த மகிழ்ச்சியை, கேளிக்கைகளையெல்லாம் துறந்துவிட்டு, தியாகம் செய்துவிட்டு, இந்தக் குறிக்கோளுக்காக நம்முடைய உயிரை ஒப்படைத்துக் கொள்ள வேண்டும் என்ற அந்த உணர்வு எல்லா இளைஞர்களுக்கும், எல்லா வாலிபர்களுக்கும் வந்தாக வேண்டும். அத்தகைய ஒரு தியாக உணர்வை வளர்ப்பதற்காகத்தான் இந்த மண்டபம் பயன்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன்” என்று 1998-ஆம் ஆண்டு கிண்டியில் ‘தியாகிகள் மண்டப’த்தைத் திறந்து வைக்கும்போது கலைஞர் சொன்னார்.

தமிழ்நாடு அரசின் செய்தி மற்றும் விளம்பர துறையின் கீழ், **‘81 நினைவகங்கள்’, ‘4 அரங்கங்கள்’, ‘5 நினைவுத் தூண்கள்’, ‘2 நினைவுச் சின்னங்கள்’, ‘ஒரு நினைவு வளைவு’** ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

## மாபெரும் மனிதர்களின் நினைவாக...

தமிழ்நாட்டின் மிகச் சிறந்த ஆளுமைகள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு பெருமையினைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், விடுதலைக்கு வித்திட்ட தியாகிகள், சமூகநீதிக் கருத்துகளை ஊக்குவித்த தலைவர்கள், கவிஞர்கள், இசைமேதைகள், இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாட்டுத் தலைவர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்திடும் வண்ணம் நினைவிடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் பெரும்பாலானவை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், எப்போதெல்லாம் தி.மு.க. ஆட்சிக்கு வருகிறதோ அப்போதெல்லாம் முந்தைய அ.தி.மு.க. அரசால் மறக்கடிக்கப்பட்ட ஆளுமைகளுக்கு ஏதேனும் ஒருவிதத்தில் உரிய கௌரவத்தையும் அங்கீகாரத்தையும் வழங்கிச் சிறப்பிக்கிறது.

முன்னோர் காட்டிய பாதையில், நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான **‘திராவிட மாடல் அரசு’** நெறி பிறழாது நிமிர்ந்து நடக்கிறது. நாடு போற்ற மறந்த நல்லவர்களுக்கு நினைவு மண்டபங்கள் அமைத்து நன்றி கூறுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பல ஆளுமைகளுக்கு (பார்க்க, பெட்டிச் செய்தி), உரிய அங்கீகாரம் கொடுத்து வருகிறது. புதிதாக மணிமண்டபங்கள் அமைப்பதோடு, ஏற்கெனவே அமைக்கப்பட்ட நினைவகங்களைப் பராமரிப்பதும் புனரமைப்பதும் நம் கழக அரசின் வழக்கமாக இருந்துவருவது இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

கழக ஆட்சி பதவியேற்ற மே 2021 முதல் இப்போது வரை அறிவிக்கப்பட்ட நினைவு மண்டபங்கள் மற்றும் நினைவு அரங்கங்கள். இவற்றில் பல திறக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ளவற்றிற்கு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. அரசியல் காழ்ப்புணர்வு இல்லாமல், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அறிவிக்கப்பட்ட சில நினைவகங்களையும் நம் கழக அரசு விரைந்து செயல்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

- ❖ புதுக்கோட்டை, மாமன்னர் ராஜகோபால தொண்டைமான் நினைவு மண்டபம்
- ❖ அயோத்திதாசர் மணிமண்டபம், வட சென்னை
- ❖ பெருங்காமநல்லூர் தியாகிகள் நினைவு மண்டபம், தேனி
- ❖ சமூக நீதிப் போராளிகள் நினைவு மண்டபம், விழுப்புரம்
- ❖ வீரமாமுனிவர் மணிமண்டபம், தூத்துக்குடி
- ❖ பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்தின் போது ஏற்பட்ட விபத்தில் உயிர் நீத்தவர்களுக்கான நினைவு மண்டபம், பொள்ளாச்சி
- ❖ பெரியவர் இளையபெருமாள் நூற்றாண்டு நினைவரங்கம், சிதம்பரம்
- ❖ மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் நினைவரங்கம், உடுமலைப்பேட்டை
- ❖ ராவ் பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் மணிமண்டபம், தூத்துக்குடி
- ❖ மேனாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் நினைவரங்கம், நாமக்கல்
- ❖ உத்தமத் தியாகி ஈஸ்வரன் நினைவரங்கம், ஈரோடு
- ❖ மேனாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி நினைவரங்கம், விழுப்புரம்
- ❖ மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை நினைவரங்கம், மயிலாடுதுறை
- ❖ இந்த அறிவிப்புகளில் முதலாவதாக எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்களுக்கு கோவில்பட்டியில் மணிமண்டபம் அமைத்து திறக்கப்பட்டுள்ளது.

நமது அரசு அறிவித்த சிலைகளில், **‘சமூக நீதிக் காவலர் வி.பி.சிங்’, ‘சிங்கப்பூரைச் சீரமைத்த லீ குவான் யூ’, ‘முல்லைப் பெரியாறு நாயகன் பென்னி குயிக்’** ஆகியவை தமிழ்நாடு மற்றும் இந்திய வரலாற்றில் மட்டுமல்லாமல், சர்வதேச வரலாற்றிலும் போற்றப்படும் முன்னெடுப்புகள் ஆகும்.

## சிலை வடிவில் சமூகநீதி!

தமிழர்களை மட்டுமல்ல... தமிழ்நாட்டு மைந்தர்களை மட்டுமல்ல... நமது மாநிலத்துக்கு வெளியே இருந்தும், தமிழர்களாக அல்லாதபோதும் தமிழர்களுக்காகப் பல உரிமைகளைப் பெற்றுத் தந்தவர்களையும் கொண்டாடுவது தமிழருக்கே உரிய குணம். நினைவு மணிமண்டபங்கள், நினைவு அரங்கங்கள் ஆகியவற்றோடு, தமிழர் நலனுக்காகச் சிந்தித்த ஆளுமைகளுக்கு சிலை திறப்பது, நம் கழக அரசின் சாதனைகளில் மிக முக்கியமாகக் குறிக்கப்பட வேண்டியது.

தமிழ்ச் சமுதாயத்துக்காக உழைத்த எத்தனையோ பெருமக்களுக்குச் சிலைகள், நினைவகங்கள், மணிமண்டபங்கள் அமைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். அவருக்கு எத்தனை சிலை அமைத்தாலும் ஈடாகாது. எனினும், அண்ணா சாலையில், பெரியாருக்கும் அண்ணாவுக்கும் மத்தியில் ஓமந்தூரார் மாளிகையில் அமைந்திருக்கும் அந்தச் சிலை ஈடு இணையில்லாதது. **இவற்றின் தொடர்ச்சியாக கலைஞர் நூற்றாண்டு விழாவை நினைவுகூரும் வகையில் சென்னையில் கலைஞர் பெயரில் ‘கன்வென்ஷன் சென்டர்’ (மாநாட்டு மையம்) அமைக்கப்படும் என்று நமது முதலமைச்சர் அறிவித்துள்ளார்.**

திராவிட இயக்கம் என்றைக்கும், மறைந்த பெரியவர்களை மதிக்கத் தவறியதில்லை. அதற்கு எடுத்துக்காட்டுகள்தான் இந்த நினைவகங்கள், படத்திறப்புகள், சிலைகள் எல்லாம். தலைவர்கள் உயிரோடு இருக்கும்போது சாதனைகளால் வாழ்ந்தார்கள். அவர்கள் மறைந்த பிறகு சிலைகளாக வாழ்கிறார்கள். ...சாதனை தொடரும்

## கலைஞரின் நூலகக் காதல்!



“செம்மொழி மாநாட்டின் இலச்சினையில் திருவள்ளுவரோடு சேர்த்து சிந்துவெளி முத்திரையையும் வைத்து உருவாக்கச் சொன்னவர் கலைஞர்" என்று கலைஞர் நூற்றாண்டில் நினைவுகூர்கிறார் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக இயக்குநர் சுந்தர் கணேசன். “கலைஞரின் கனவுகளை நனவாக்க எங்களால் இயன்ற பணிகளைச் செய்வோம்” என்ற உறுதியையும் முகநூல் பதிவின் வழியாக அவர் அளித்துள்ளார்.

சிந்துவெளிக் கண்காட்சியை 20 நிமிடங்களுக்கு மேல் ஆய்வாளரின் ஆர்வத்துடன் கண்டு ரசித்தது, ரோஜா முத்தையா இயங்கி வந்த வாடகைக் கட்டடத்தைக் குத்தகைக் கட்டடமாக மாற்றி நிதிச் சிக்கலிலிருந்து நூலகத்தை மீட்டது, நிதி உதவி தேவைப்படும்போது அதை ஆதரித்து எழுதியது எனப் பல அனுபவப் பகிர்வுகள், கலைஞரின் நூலகக் காதலை வெளிப்படுத்துகின்றன.

அரசு சார்பில், அண்ணா நூற்றாண்டு நூலகம் போல் ஓர் அறிவுக் கட்டடத்தை அமைத்தவர், தனியார் நூலகங்களுக்கும் பல வகையில் உதவிகளைப் புரிந்துள்ளார் என்பதைப் பார்க்க முடிகிறது. கோபாலபுரம் இல்லத்திலும் குறிப்பிடத்தகுந்த அளவு புத்தகங்களைச் சேமித்து வைத்திருந்த கலைஞருக்குள் நிழலாக ஒரு நூலகரும் இருந்திருக்கிறார்.

## :ப்ளாஷ்பேக்



## தட்டிக் கொடுத்தார்!



மணிமாறன்

மதுரை கே.கே.நகரில் 1987-ஆம் ஆண்டு மே 17-அன்று அன்றைய அமைப்புச் செயலாளர் எஸ்.எஸ்.தென்னரசு தலைமையில் கழக வளர்ச்சி நிதி அளிக்கும் விழா நடைபெற்றது. வட்டக் கழகம் சார்பாக, போட்டி போட்டுக் கொண்டு நிதி வசூல் செய்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் அளித்தோம். தலைவர், ‘கட்சிப் பணிகளைச் சிறப்பாகச் செய்’ என்று முதுகில் தட்டிக் கொடுத்துப் பாராட்டு தெரிவித்தார்.

**-பி.டி.மணிமாறன், பொதுக்குழு உறுப்பினர், மதுரை மாநகர் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ராஜாஜியின் ஆசை!

**1964-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது ராஜாஜி அவர்களுக்கும், கழகத்துக்கும் இடையே நெருக்கமான உறவு ஏற்பட்டது. 1937-38-ஆம் ஆண்டுகளில் இந்தியை தமிழ்நாட்டில் நுழைப்பதற்கு முயற்சி எடுத்த ராஜாஜி அவர்களே, 1965 -ஆம் ஆண்டில், ‘‘இந்தி வெறியர்களின் போக்கைப் பார்க்க எனது மூளையில்கூட பிரிவினை எண்ணம் வந்து விட்டது’’ எனக் கூறினார். 1967-ஆம் ஆண்டு தேர்தலின் போது, ராஜாஜி மிகுந்த உற்சாகத்தோடு கழகம் ஆட்சி அமைப்பதைப் பார்த்துவிட்டுத்தான் கண்மூட வேண்டும் என்றார். அவரது ஆசையையும் கழகம் நிறைவேற்றியது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 139




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131